# இதுவே தகுந்த நேரம்

**Singapore People's Party**
**新 加 坡 人 民 党**
**PARTI RAKYAT SINGAPURA**
**சிங்கப்பூர் மக்கள் கட்சி**

அறிக்கை 2025

## Please scan this QR code for the manifesto in English.

## 请扫描此二维码，查看中文竞选宣言。

## Sila imbas kod QR ini untuk manifesto dalam bahasa Melayu.

# இதுவே சரியான வழி

## அனைத்துத்தனைமுனைக்குமைாளதிரக்ணாம்

சக சிங்கப்பூரர்கள்,

வாக்குப்பதிவுத் திகதிகள் நெருங்கி வந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், வளர்ந்து வரும் சவால்களுக்கான தீர்வுக்காக எமது அறிக்கையை நீங்கள் ஆராய்ந்து, அதன் பொருள் மற்றும் நோக்கத்தைப் புரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்புணர்வு, கடமையுணர்வு மற்றும் பரிவு (A.C.E.) ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட தொலைநோக்கு, அனைத்துத் தரப்பினருக்கும் நியாயமான சமத்துவமும் பொருளாதார நிலைத்தன்மையும் உறுதி செய்யும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதே எங்கள் நோக்கமாகும்.

எங்கள் 2020 கணக்கெடுப்புக்கு அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை, சிங்கப்பூரரின் வளர்ந்து வரும் தேவைகளை முழுமையாகப் பிரதிபலிக்கிறது.

ஜனநாயகமான, அக்கறையுள்ள, உள்ளடக்கமான சிங்கப்பூர் — உங்கள் ஒவ்வொரு வாக்கும் எங்கள் சாத்தியமான எதிர்காலத்தை உருவாக்கும் சக்தியாகும்.

**Steve Chia**
பொதுச் செயலாளர்

# கருப்பொருள் 1
# பொருளாதார நிலைத்தன்மை மற்றும் நேர்மை

## அதிகரிக்கும் வொழ்க்ககச் பசலவினம், பணவீக்கம்

சிங்கப்பூரர்களின் ஊதிய உயர்வு நீண்ட காலமாக நிலைத்திருக்கிறது. வாழ்க்கைச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்துவருவதால், எதிர்காலத்திற்காக சேமிக்க முயற்சிக்கும் இளையர்கள், பிள்ளைகளை வளர்க்கும் குடும்பங்கள், மற்றும் ஓய்வூதியம் குறைவாக இருக்கும் மூத்தோர் ஆகியோர் கணிசமான சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

### SPP முன்மொழிதல்:

- **நிரந்தர ஆண்டு உதவித் தொகைகள் :** அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் எந்தவொரு உபரிவும் குறைந்த வருவாய் ஈட்டும் அனைத்து சிங்கப்பூரர்களுக்கும் சிடிசி (CDC) பரிசுச் சீட்டுகளாக வழங்கப்படும். இது சமநிலையான வரவுசெலவுத் திட்டத்தை உறுதிசெய்யும், அதே நேரத்தில் அனைத்து நிதிச்சுமைகளையும் குறைக்கும்.

- **பொருட்சேவை வரி (GST) உயர்வை நிலைப்படுத்துதல்:** பொதுமக்களின் கொள்முதல் திறனைப் பாதுகாப்பதற்காக, தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வரவு செலவு பற்றாக்குறை தேசிய வருவாயின் 3%-ஐ நெருங்கும் வரை, பொருட்சேவை வரி (GST) உயர்வை இடைநிறுத்தும்.

- **நடப்புச் சம்பளக் கொள்கை:** குறைந்த வருவாயுடன் வாழும் ஊழியர்கள் மற்றும் குடும்பங்கள், தங்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும், நிதிச்சுமையை குறைக்கவும் துணைபுரியும் வகையில், நடப்புச் சம்பளக் கொள்கை விரிவுபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

- **முற்போக்கான வரிவிதிப்பு:** உயர்ந்த வருமானம் பெறும் 2% மக்களின் வருமானவரி அதிகரிக்கப்படும். மேலும், மிக அதிக நிகர சொத்துகள் கொண்ட தனிநபர்களுக்கான சொத்துவரி மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம், சமநிலையான நிவாரண நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி திரட்டப்படும்.

# கருப்பொருள் 2
# வேலை வாய்ப்பு மற்றும் வேலைப் பாதுகாப்பு

## வேலை பாதுகாப்பின்மை, வேலையின்மை

தானியக்கமாதல், ஆட்குறைப்பு அச்சுறுத்தல்கள், குறைவான வேலைவாய்ப்பு மற்றும் அயல்நாட்டுத் திறன் போட்டிகள் ஆகியவை, ஊழியர்களாகச் சேரும் இளையர்களை, வேலை பார்க்கும் அனைத்து பெரியவர்களை, மற்றும் ஓய்வுக்கு நெருங்கும் மூத்தோர்களை பாதிக்கின்றன.

### SPP முன்மொழிதல்:

- **உள்ளூர் மக்களை வேலைக்கு அமர்த்துவதற்கான ஊக்கத்தொகைகள்:** சிங்கப்பூர் குடியுரிமை உள்ள அனைத்து வயதினரையும் உள்ளடக்கிய வல்லுநர்கள், மேலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் (PMETs) ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கும் தொழில்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படும். தகுதிபெறுவதற்கான உள்ளூர் சம்பளத்தை உயர்த்துவதன் மூலம் நியாயமான சம்பளம் உறுதிப்படுத்தப்படும். மேலும், அதிக அளவில் உள்ளூர் திறனாளர்களை வேலைக்கு அமர்த்தும் ஒதுக்கீடுகள் அமல்படுத்தப்பட வேண்டும் என்பதே எங்கள் வலியுறுத்தல்.

- **சட்டப் பாதுகாப்புகள்:** TAFEP வழிகாட்டுதல்கள் (நடுநிலையான வேலைவாய்ப்பு நடைமுறைகள் மீதான முக்கூட்டு வழிகாட்டுதல்கள்) சட்டத் தளத்தில் அடிக்கோடாக மாற்றப்படும். இது, செயல்படுத்தக்கூடிய சமநிலை வாய்ப்புகளை உறுதிசெய்து, நியாயமான முறையில் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை கட்டாயமாக்கும். மேலும், நியாயமான பணிநிறைவு நிபந்தனைகள் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

# கருப்பொருள் 2
# வேலை வாய்ப்பு மற்றும் வேலைப் பாதுகாப்பு

**SPP முன்மொழிதல்:**

- **நீக்குப்போக்கான பணிஓய்வு:** பழமையான சட்டப்பூர்வ பணிஓய்வு வயதான 63 ஒழித்துவிட்டு, ஓய்வு பெறுவதை அந்தந்தத் தனிநபர் முடிவுசெய்துகொள்வதற்கு அனுமதிக்கப்படும், மேலும் 70 வயதுக்குப் பிறகும் வேலைப்பார்க்க விருப்பப்படும் மூத்தோரை பணியமர்த்தும் நிறுவனங்களுக்குப் பெருநிறுவன வரிச் சலுகைகள் அளிக்கப்படும்.

- **சிங்கப்பூருக்கு வரும் ஊழியர்கள் பற்றிய கவலைகளைத் தீர்க்க, இந்தியாவுடனான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் (CECA) மறுஆய்வு செய்யப்படும்.**

- **ஒதுக்கீட்டைக் குறைத்தல்:** தானியங்கித் துறைகளில் சிறப்பு மற்றும் வேலை அனுமதி ஒதுக்கீடுகள் மற்றும் சார்ந்திருப்போர் விகிதங்களை படிப்படியாகக் குறைத்து, தானியக்க முறைகளை ஊக்குவித்து, உயர் திறனும், உயர் மதிப்பும் கொண்ட பொருளாதாரத்தை நோக்கி நகர்வோம். குறைந்த அளவிலான அயல்நாட்டுத் தொழிலாளர்கள் தேவைப்படும் உயர் தொழில்நுட்ப உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளை அதிகரிப்பதே எங்கள் நோக்கமாகும்.

# கருப்பொருள் 3
# வீடமைப்பு மற்றும் ஓய்வுக்கால பாதுகாப்பு

## கட்டுப்படியாகும் வீட்டு வசதி, போதுமான பணி ஓய்வுக்காலம்

அதிகரித்து வரும் தனியார் சொத்துகளின் விலையும், வீவக குத்தகையின் வீழ்ச்சியும், சிங்கப்பூர் குடியுரிமை உள்ள வாங்குபவர்களையும் உரிமையாளர்களையும் ஒரே விதமாகப் பாதித்துள்ளன. வீடு வாங்கவோ அல்லது மேம்படுத்தவோ விரும்பும் இளவயது திருமணமாகாதவர்கள், குடும்பங்கள், மற்றும் தங்களுடைய வீடுகளை சிறிய வீடுகளாக மாற்ற விரும்பும் மூத்தோர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

### SPP முன்மொழிதல்:

- **திருமணமாகாத சிங்கப்பூரருக்கான வீவகத் திட்டம்:** விருப்பத்துக்கேற்ப கட்டித் தரப்படும் வீடுகள் (BTO) அல்லது மறுவிற்பனை வீவக வீடுகளை வாங்க விரும்பும் திருமணமாகாத சிங்கப்பூரர்களுக்கான குறைந்தபட்ச வயது 30-ஆக குறைக்கப்படும்.

- **விரிவாக்கப்பட்ட SERS:** குத்தகைக் காலம் முடிவுக்கு நெருங்கும் அனைத்துப் பேட்டைகளிலும், ஒட்டுமொத்த மறுமையாக்கத் திட்டம் (SERS) நடைமுறையில் கொண்டு வரப்படும். இதன் மூலம், வீவகச் சொத்தின் மதிப்புச் சத்தியம் பாதுகாக்கப்படும்.

- **இன ஒதுக்கீட்டைப் படிப்படியாக நிறுத்துதல்:** அனைத்து வீவகப் பேட்டைகளிலும் உள்ள இன ஒதுக்கீட்டைத் தளர்த்துவதற்கான ஐந்து வருடங்களுக்கு ஒரு முன்னோடித் திட்டம் தொடங்கப்படும். இந்த நடவடிக்கை, சிறுபான்மை வீட்டு உரிமையாளர்கள் தங்களுடைய வீவக வீட்டை நியாயமான விலைக்குப் பொதுச் சந்தையில் விற்க உதவிடும்.

# கருப்பொருள் 4
# குடும்ப ஆதரவு மற்றும் பிறப்பு விகிதங்கள்

பிறப்பு விகிதங்களை அதிகரித்தல்

சிங்கப்பூரில் பிறப்பு விகிதங்கள் கடுமையாகக் குறைந்து வருகிறது. பிள்ளைப்பேற்றுத் தன்மையை மேலும் கவர்ச்சிகரமானதாகச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் துணிச்சலாகப் பெரிய அளவில் மேற்கொள்ளவேண்டும். இரண்டாவது மூன்றாவது குழந்தைகளைப் பொருளாதார பொறுப்பாகக் கருதாமல் அதை ஒரு சொத்தாகக் கருதும் மனநிலையை ஏற்படுத்தும் சூழலை உருவாக்க வேண்டும். பிள்ளைப்பேற்றுக்குப் பெரும் ஊக்கத்தொகைகள் வெகுமதியாகக் கொடுக்கப்படவேண்டும்.

## SPP முன்மொழிதல்:

- **இரண்டாவது பிள்ளை வீடமைப்பு ஊக்குவிப்புகள்:** இரண்டாவது பிள்ளையை பெற்றுப் பெறும் பெற்றோர், தங்களுடைய வீவக / பிடிஓ (BTO) வீடுகளைப் பெரியதாக மேம்படுத்துவதற்காக கூடுதல் வீடமைப்புச் சலுகைகளைப் பெற அனுமதிக்கப்பட வேண்டும். இந்த வகை ஊக்கத்தொகைகள், நாட்டின் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க ஒரு முக்கிய ஊக்கமாக அமையும்.

- **மூன்றாவது பிள்ளைச் சலுகைகள்:** மூன்றாவது பிள்ளை உள்ள பெற்றோர், கூடுதல் வாங்குவோருக்கான முத்திரை வரி (ABSD) இல்லாமல் தனியார் சொத்துகள் வாங்க அனுமதிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில், வீவக அல்லது பிடிஓ வீடுகளை மூன்றாவது முறையாக மேம்படுத்த விரும்புவோருக்கு, அதிகரிக்கப்பட்ட வீடமைப்புத் தொகை ஊக்கமாக வழங்கப்பட வேண்டும்.

- **ஐவிஎஃப் (IVF) மானியங்கள்:** குடும்பத்தைத் தொடங்குவதற்காக ஐவிஎஃப் (IVF) சிகிச்சைக்குத் தேவையான தம்பதிகளுக்கு, நிதியுதவி வழங்கப்படும்.

# கருப்பொருள் 5
# ஆளுமை மற்றும் குடியாட்சி / ஜனநாயகச் சுதந்திரம்

## அரசியல் சுதந்திரம், வெளிப்படைத்தன்மை, ஜனநாயகம் / குடியாட்சி

சுதந்திரம் கிடைத்துவிட்டு 60 ஆண்டுகளாகிவிட்ட நிலையில், மக்கள் இப்போது அதிக வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் பொது உரையாடல்களில் பலதரப்பட்ட மக்களின் கருத்துகள் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர்.

### SPP முன்மொழிதல்:

- **விகிதாச்சார பிரதிநிதித்துவம்:** பாராளுமன்றத்தில் சிறிய கட்சிகளின் மாறுபட்டக் கருத்துகளும் பிரதிபலிக்க, விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை அனுமதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதே எங்களுடைய முன்மொழிப்பு.

- **தகவலறியும் சுதந்திரம்:** பொதுத் தகவலை அணுகுவதற்கான சட்டத்தை இயற்றி அதன் மூலம் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கப்படும்.

- **வெளிப்படையான உரையாடல்:** அனைத்து வயதினரும் வெளிப்படையாக உரையாடுவதை ஊக்குவிக்கும் விதமாக அவதூறு சட்டங்கள் தளர்த்தப்படும்.

- **கழிவுகளைக் குறைத்தல்:** ஒவ்வொரு அமைச்சின் வரவுசெலவுத் திட்டத்திலும் ஆண்டுதோறும் 2% கட்டாயக் குறைப்பு கொண்டு வரப்பட்டு, அரசாங்கத்தின் தேவையற்ற செலவுகள் அடுக்கடுக்காக குறைக்கப்படும்.

- **நிர்ணயிக்கப்பட்டத் தேர்தல்கள்:** அனைவருக்கும் சமமான தேர்தல் களத்தை உறுதிசெய்யவும், நியாயத்தன்மையை அதிகரிக்கவும் தேர்தல் வருடமும் தேதியும் நிர்ணயிக்கப்படும்.

- **சுதந்திரமான / சுயாதீனமான தேர்தல் ஆணையம்:** தேர்தல் எல்லைக்குழுவை பிரதமர் அலுவலகத்திலிருந்து நீக்கி, ஒரு சுதந்திரமான தேர்தல் ஆணையம் அமைக்கப்பட வேண்டும். இது, நாடு முழுவதும் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை கண்காணிக்கும்.

# கருப்பொருள் 6
# கல்வி மற்றும் இளையர் நலம்

இளையர், கல்வி முறை, மன அழுத்தங்கள்

கல்வி இளையர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதனால், மூத்தோர் மன நல பிரச்சினைகளுக்கும், வருங்கால தலைமுறையின் பொருத்தத்திற்கான தேவைக்கும் இடையே தொடர்பு காணப்படுகின்றது — இது அவர்களைப் பெரிய அளவில் கவலைக்குள்ளாக்குகிறது.

**SPP முன்மொழிதல்:**

- **தனிப்பயனாக்கப்பட்டக் கற்றல்:** மாணவர்கள் தங்களுக்கேற்ற வகையில் கற்றல் பெறுவதற்காக, வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும்.
- **நவீன பாடத்திட்டம்:** செயற்கை நுண்ணறிவை ஒட்டி தேர்ச்சி மற்றும் திறன் அடிப்படையிலான பகுத்தறிவு திறன்களை உருவாக்கும் வகையில், பரீட்சை அழுத்தம் குறைக்கப்பட்டு தொழில்முனைவு மற்றும் தொழில்சார் விருப்பத்தேர்வுகள் அறிமுகப்படுத்தப்படும்.
- **மன அழுத்தத்திற்கான உதவி:** பள்ளிகளிலும் சமூகங்களிலும் உள்ள வளங்கள் விரிவுப்படுத்தப்படும்.
- **உலகளாவிய வாய்ப்புகள்:** அயல் நாடுகளில் படிக்கும் 3ஆம் நிலை கல்வியைப் பாதுகாப்புடன் கற்க மசேநிதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.
- **இளையர் ஈடுபாடு:** வாக்களிக்கும் வயதை 18 ஆகக் குறைத்து அதன் மூலம் அவர்களை ஆட்சியிலும் குடிமக்கள் கடமையிலும் அதிகம் ஈடுபடுத்தப்படுவார்கள்.

# கருப்பொருள் 7
# சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மன நலம்

சுகாதாரப் பராமரிப்புக் கட்டணங்கள், அணுகல்தன்மை, மனநல ஆதரவு

அதிகரித்து வரும் சுகாதாரச் செலவுகளும், மனநலச் சவால்களும், மூத்தோர், இளையர்கள் மற்றும் சுகாதார சேவையை நேரத்தில் பெற வேண்டிய அனைவருக்கும் பெரும் சுமையாக உள்ளன.

**SPP முன்மொழிதல்:**

- **தொலைப்பேசிவழி சுகதாரத்தை அணுகுதல்:** வயதானவர்களுக்கும், குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் தொலைப்பேசிவழி மருத்துவ ஆலோசனைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.
- **மெடிசேவ் விரிவாக்கம்:** அனைத்துத் தடுப்பு மற்றும் மனநலப் பராமரிப்புக்கான வருடாந்திர பணம் எடுக்கும் வரம்பு SGD1,200-இலிருந்து அதிகரிக்கப்படும்.
- **முதியோர் பராமரிப்பு உதவி:** இருக்கும் இடத்திலேயே மூப்படைவதற்கான சேவைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும், கைச்செலவுக் கட்டணங்களுக்கு ஓர் உலகளாவியத் திட்டம் மூலம் உச்சவரம்பு நிர்ணயிக்கப்படும்.
- **மனநலன் ஒருங்கிணைப்பு:** அனைத்து மனநலன் பராமரிப்பு வல்லுநர்களையும் அனைத்துப் பலதுறை மருந்தகங்களிலும் மற்றும் தேசிய சேவை நிலையங்களிலும் ஒருங்கிணைத்து அதன் மூலம் தேவையுள்ளோருக்குப் பரந்த அணுகும்தன்மை அளிக்கப்படும்
- **மனநலச் சுகாதார விடுப்பு:** ஐந்து நாட்கள் சம்பளமின்றி மனநலச் சிகிச்சை விடுப்பும் வழங்கப்படும்.
- **மறுவாழ்வில் கவனம்:** மனநல பாதிப்புடைய குற்றவாளிகளுக்கான கட்டாய சிகிச்சை ஆணைகள் தளர்த்தப்படும், இதன் மூலம் மறுசுழற்சி சீர்திருத்தத்திற்கு மையம் வைக்கப்படும்.

# கருப்பொருள் 8
# நிலைத்தன்மையுடன்கூடிய பொதுப் போக்குவரத்து

பொதுப் போக்குவரத்துச் சவால்கள், பசுமை சிங்கப்பூர்

பொதுப் போக்குவரத்து, வேலைபார்க்கும் மூத்தோருக்கும் இளையருக்கும் உதவுகிறது, ஆனால் அதன் கட்டணம் குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்குச் சிரமமாக உள்ளது, மேலும் இரயில் நிலைத்தன்மை மோசமாகப் பின்தங்கியுள்ளது. நாம் எம்ஆர்டி சேவைகள் கட்டுப்படியானதாகவும், எளிதில் அணுக்க்கூடியதாகவும், செயல்திறனுடன் இருப்பதற்கு முன்னுரிமை அளிப்போம்.

## SPP முன்மொழிதல்:

- **நம்பத்தகுந்த எம்ஆர்டி:** எம்ஆர்டி பராமரிப்பு வேலைகளில் அதிகம் முதலீடு செய்து நம்பகத்தன்மையையும் செயல்திறனையும் உறுதிசெய்து, பெரிய அளவில் இரயில் சேவைத் தடங்கல் இல்லாது பார்த்துக்கொள்ளப்படும்.

- **பயண நிதியுதவி:** குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்கும், மூத்தோர் ஆதரவு பெறுவோருக்கும் பயணம் செய்வதற்கு அதிக மானியம் அளித்து அவர்களுடைய நிதிச் சுமைக் குறைக்கப்படும்.

- **பசுமை மாற்றம்:** அனைத்துப் பொதுச் சேவைப் பேருந்துகளையும் 2040-க்குப் பதில் 2033-க்குள்ளாக முழுமையாக மின்மயமாக்கம் செய்வது துரிதப்படுத்தப்படும்.

## கருப்பொருள் 9
## சமூகக் கூட்டிணைவு மற்றும் தேசிய அடையாளம்

சமூகநலம், சமத்துவமின்மை, மூப்படையும் மக்கள்தொகை ஆதரவு, தேசிய சேவை விவாதங்கள்

சமத்துவமின்மை, மூப்படைதல் தேவைகள், மற்றும் தேசிய சேவை (NS) விவாதங்கள் இளையரை, குடும்பங்களை மற்றும் மூத்தோரிடையே தாக்கத்தை ஏற்படுத்துவதோடு சமூக ஒற்றுமையையும் தேசிய விழுமியங்களையும் சோதிக்கின்றன.

**SPP முன்மொழிதல்:**

- **குறைந்தபட்ச சம்பளம்:** கௌரவத்தோடு வாழ்வதை உறுதிசெய்ய வாழ்க்கைச் சம்பளம் நிர்ணயிக்கப்படும். (எ.கா. மாதம் 1500 டாலர்)

- **செல்வத்தை மறுப்பங்கீடு செய்தல்:** குறைந்த வருவாய் ஈட்டும் குழுக்களுக்கு வரிச் சலுகைகளை அதிகரித்து, உயர்மட்ட வருமான வரிகளை அதிகரித்து, குறைந்த வருவாய் ஈட்டும் ஊழியர்கள் மற்றும் குடும்பங்களுக்கான சிடிசி பற்றுச்சீட்டுகள் அதிகரிக்கப்படும்.

- **பராமரிப்பாளருக்கான ஆதரவு:** பெற்றோர் பராமரிப்புக்கு ஐந்து நாள் சம்பளத்துடன்கூடிய விடுப்பு அளிக்கப்படும், முதியவர்களுக்கு உகந்த இல்லங்களுக்கு மற்றும் ஓய்வுக்கால கிராமங்களுக்கு மானியம் வழங்கப்படும்.

- **தேசிய சேவை (NS) சீர்திருத்தம்:** தேசிய சேவைக் காலத்தை 18 மாதங்களாகக் குறைத்து, தேசிய சேவையாளர்களுக்கான படித்தொகை, அவர்கள் தங்கள் நேரத்தைத் தியாகம் செய்வதை அங்கீகரிக்கும் விதமாக வழக்கமான ஊதியத்தின் 80% வருமளவுக்கு அதிகரிக்கப்படும்.

# எங்கள் கடப்பாடு. உங்கள் முடிவு.

கூட்டு எதிர்காலத்திற்கான SPP-யின் அர்ப்பணிப்புணர்வைப் பிரதிபலிக்கும் இந்தக் கட்சி அறிக்கை கலந்துரையாடலுக்கான ஓர் அழைப்பு ஆகும். இந்த 9 கருப்பொருள்களையும் எடுத்துரைப்பதன் மூலம் நாங்கள் ஒரு நியாயமான, வலுவான சிங்கப்பூரை முன்மொழிகிறோம். அதில் ஒவ்வொருவரது குரலுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும், ஒவ்வொரு தேவையும் பூர்த்திசெய்யப்படும்.

வாருங்கள், ஒன்றுசேர்ந்து அனைத்துத் தலைமுறையினருக்குமான தேசத்தைக் கட்டமைப்போம்.

# நன்கொடையளித்திடுங்கள்

Singapore People's Party

2025 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில், பிஏபிக்கு எதிராக நம்பிக்கைக்குரிய மற்றும் திறமையான சவாலொன்றை எஸ்பிபி (SPP) தொடுக்கும்போது, எங்கள் குழுவிற்கு உங்களின் முழு ஆதரவும் தேவைப்படுகிறது. உங்கள் நன்கொடை அனைத்துப் பிரசாரச் செலவுகளுக்கும் செலவிடப்படும். ஒவ்வொரு டாலரும் முக்கியம்!

# எங்களுடன் தொண்டுப்பணி செய்யுங்கள்

# எங்களைப் பின்தொடர்ந்திடுங்கள்

www.spp.sg

@SingaporePeoplesParty

@spp_sg

# சிங்கப்பூர் மக்கள் கட்சி (SPP) குறித்த சிறு வரலாறு

SPP 21 நவம்பர் 1994 ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது. சிங்கப்பூரின் குறிப்பிடத்தக்க எதிர்க்கட்சியாக உருவாகிய இது திரு சியாம் சீ தொங் அவர்களால் வழிநடத்தப்பட்டது. திரு சியாம் 1984 ஆம் ஆண்டு முதல் பொத்தோங் பாசிர் தொகுதியைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்து வருகிறார். அவர் முதலில் SDP-யின் கீழும் பின்னர் 1997 ஆம் வருட பொதுத் தேர்தல் முதல் SPP-யின் கீழும் செயல்பட்டு வருகிறார்.

2011 ஆம் வருடம் திரு சியாம் பீஷான் – தோ பாயோ குழுத்தொகுதியில் போட்டியிட்டார். அதே சமயம் அவருடைய துணைவியார் திருவாட்டி லீனா சியாம் பொத்தோங் பாசிர் தொகுதியிலிருந்து போட்டியிட்டார். இருவரும் சிறு வித்தியாசத்தில் தோற்றுப் போயினர். திருவாட்டி சியாம் தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் மூலம் SPP-யின் குரல் பாராளுமன்றத்தில் 2015 வரை எதிரொலித்தது.

2001 முதல் 2006 வரை நடைபெற்ற 10வது பாராளுமன்றத்தில், நாடாளுமன்றத்திலேயே இளைய உறுப்பினராகத் திகழ்ந்தவர் திரு ஸ்டீவ் சியா (NSP/SDA). அவர் முதலில் தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினராக (NCMP) பணியாற்றினார். பின்னர், எஸ்பிபியில் (SPP) இணைந்து, 2019 ஆம் ஆண்டு பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் SDA வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், திரு சியாம் சீ தொங் அவர்களை, பாராளுமன்றத்திற்குள் தன்னை வழிநடத்திய விளக்கொளி என மதிப்பிட்டு புகழ்ந்துள்ளார்.

திரு ஸ்டீவ் 2006 ஆம்ஆண்டு தன்னுடைய பாராளுமன்ற உரைகளையும் கேள்விகளையும் தொகுத்து "கால்டு டு சர்வ்" என்ற புத்தகமாக வெளியிட்டார். அவர் அந்த 4+ வருடங்களில் மொத்தம் 236 பாராளுமன்றக் குறிப்புகள் குறித்துப் பேசி பதிவிட்டார். அவர் பதிவிட்டதில் மூத்த குடிமக்களான முன்னோடித் தலைமுறையினரைக் கவனித்துக்கொள்வது (அதுவே அரசாங்கத்தின் முன்னோடித் தலைமுறைத் தொகுப்பை வெளியிடுவதற்குக் காரணமாக அமைந்தது) திருமணமாகாதவர்கள் முன்கூட்டியே வீவக வீடுகளை வாங்க அனுமதிப்பது மற்றும் பெரிய அளவிலான பொதுப் போக்குவரத்து மானியங்கள் போன்றவை அவற்றில் சில.

திரு சியா அவர்களின் தலைமையில், SPP 2020 பொதுத்தேர்தலில் பீஷான் – தோ பாயோ குழுத்தொகுதியில் போட்டியிட்டு 32.77% வாக்குகளையும், பொத்தோங் பாசிர் தொகுதியில் 39.23% வாக்குகளையும் பெற்றது. தோற்றப் போதிலும், திரு ஸ்டீவ் தனது விடாமுயற்சி குறித்தும் மீள்தன்மைக் குறித்தும் பிரதிபலிக்கிறார். தனது நீண்ட பயணத்திற்கான உந்துதலைச் சகிப்புத்தன்மை, மன உறுதி மற்றும் சுய கண்டுபிடிப்புப் போன்ற நீண்ட தூர பயணத்திற்கான தத்துவத்திலிருந்து பெற்றார். அவர் பாராளுமன்றத்தில் PAP-யின் பெரும்பாண்மையைத் சவாலுக்கு உட்படுத்துவதையும், மேலும் அனைவருக்குமான அரசாங்கக் கொள்கைகளில் அதிக பொறுப்புணர்வையும் வெளிப்படைத்தன்மையையும் கோருவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்

# இதுவே தகுந்த நேரம்

விலைவாசி உயர்வையும் சம்பளத் தேக்கத்தை நிறுத்துவதற்கான நேரம்.
ஜிஎஸ்டி உயர்வை தடுத்துச் சமச்சீரான வரவு செலவுத் திட்டத்தைப் பெறுவதற்கான நேரம்
வீவக குத்தகைச் சிதைவு விவகாரத்திற்குத் தீர்வு காண்பதற்கான நேரம்
வீவக இனஞ்சார் ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தளர்த்துவதற்கான நேரம்
நியாயமான சம்பளத்துக்கு அதிக உள்ளூர் ஆள் எடுப்பு ஒதுக்கீட்டுக்கான நேரம்
CECA ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வதற்கும் மறுமதிப்பீடு செய்வதற்குமான நேரம்
தானியக்கத் துறையில் இ-பாஸ் மற்றும் சார்புத்தன்மை விகிதத்தைக் குறைப்பதற்கான நேரம்
பிள்ளைகள் பெற்றுக்கொள்வதை முதலீட்டு அதிகரிப்புக் கொள்கையாகப் பார்ப்பதற்கான நேரம்
பாராளுமன்றத்திற்கும் தேர்தலுக்கும் நிலையான வருடங்களை நிர்ணயிப்பதற்கான நேரம்
பாராளுமன்றத்தில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் இருப்பதற்கான நேரம்
தகவலறியும் சுதந்திரத்திற்கான சட்டம் இயற்றுவதற்கான நேரம்
அவதூறுச் சட்டங்களையும் மற்றும் POFMA-வைப் பயன்படுத்துவதை எளித்தாக்குவதற்கான நேரம்
பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் திறன் சார்ந்த கற்றலுக்கு மாறுவதற்கான நேரம்
அதிக மனநல ஆதரவுச் சேவைகளும் மானியங்களும் இருப்பதற்கான நேரம்
வாக்களிக்கும் வயதை 18 ஆக்க் குறைப்பதற்கான நேரம்
அதிகரித்திருக்கும் சுகாதாரப் பராமரிப்புச் செலவினங்களையும் மனநலச் சவால்களையும் சரிசெய்வதற்கான நேரம்.
மிக அதிகமாக முதலீடு செய்து பெரிய அளவில் இரயில் சேவையில் தடங்கல் இல்லாமல் இருப்பதற்கான நேரம்
பேருந்துகளை முழுமையாக மின்மயமாக்கம் செய்வதை 2033- ஆம் ஆண்டில் நிறைவுசெய்வதற்குத் துரிதப்படுத்துவதற்கான நேரம்
கௌரவமான வாழ்க்கை வாழ்வதை உறுதிசெய்திட நடப்புச் சம்பளக் கொள்கையை அமைப்பதற்கான நேரம்
தேசிய சேவை காலத்தை 18 மாதங்களாகக் குறைப்பதற்கும் என்எஸ் ஊதியத்தை அதிகரிப்பதற்குமான நேரம்
பாராளுமன்றத்தில் அதிக அளவில் மாற்றுக் குரல்களும் சமநிலையும் இருப்பதற்கான நேரம்.

**இப்போது தான் செயல்பட வேண்டிய நேரம் – உங்கள் வாக்கின் மூலம், பாராளுமன்றத்தில் அதிகாரச் சமநிலையை மாற்ற முடியும்.**

Approved By: Singapore People's Party
Printed By: A Team Global Print Pte Ltd